Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (5—10—49) வெளியூர் (6—10—49) | இதழ் 57

தேசியத் தொழிற்சங்கம் ஓர் அழிவுசக்தி!

தொழிலாளர் நலமல்ல நோக்கம்

பாட்டாளிகளைப் பழிவாங்கும் பாசீச ஸ்தாபனம்

தொழிலாளர்களின் சீரழிக்கும் ஆளவந்தார்களின் எடுபிடி!

பணமூட்டைகளுக்குக் கட்டியம் கூறித்திரியும் கும்பல்!

"இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சியினர் வசம் சிக்கிவிட்டது. தொழிலாளர் நன்மை அல்ல அவர்கள் நோக்கம். அரசியலைக் கைப்பற்றுவதுதான் அவர்கள் குறிக்கோள். எனவே தேசியத் தொழிற் சங்கத்தை நிறுவினோம்."

"அகில இந்திய இரயில்வே தொழிற் சங்கமும் சோஷலிஸ்டுகள் வசமாகிவிட்டது அவர்களுக்கும், அரசியலில் ஆதிக்கம் பெறுவதுதான் இலட்சியம். எனவே, தேசிய இரயில்வே தொழிற் சங்கத்தை அமைத்திருக்கிறோம்."

இப்படிப் பேசிவருகிறார். தமிழ்நாட்டுக்குத் திக்விஜயம் செய்துள்ள, தேசியத் தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹரிஹரநாத் சாஸ்திரி!

அரசியல், சகதியில் அமுக்கப்படாத-உடல் உழைத்து அறியாத-ஆடை கலங்காத-அந்தஸ்துப் புருஷர்களுக்குத்தான் காணியாட்சி செய்யப்பட்டுவிட்டிருக்கிறதா என்ன? அல்லது ஹரிஹரநாத் சாஸ்திரி போன்ற, பக்த ஹனுமார்களுக்குத்தான், அரசியலில் ஆதிக்கம் பெறும் உரிமையுண்டு என்று, இயற்கை, விதி செய்திருக்கிறதா என்ன? அல்லது கதர்ச் சட்டையுடனும்-காந்தி பஜனையுடனும்-தன்னை அண்டிவருகிற காங்கிரஸ்காரர்களுக்குத்தான், ஆட்சிபீடம் - சங்கப்பலகைபோல — இடம் கொடுக்கும், மற்றவர்களை விரட்டியடிக்கும் என்று அநுபவம் இருக்கிறதா என்ன?

அரசியல் அதிகாரம் பெறுவது பாபகாரியமா? காங்கிரஸ்காரர்கள் போன்ற புண்யாத்மாக்கள், பதவியிலே அமர்ந்திருப்பதுதான் புண்யகாரியம், மற்றவர்கள் அதற்கு ஆசைப்படுவது நிவர்த்திக் கூடாத பாபச் செயலா? தொழிலாளர்களை துணைகொண்டு ஆட்சியைப் பிடிக்க காங்கிரஸ் தியாகிகள் நீங்கலாக-மற்று எவர் முனைவதும் பஞ்சமா பாதகமா? பார்ப்பனப் பசப்பு!

கம்யூனிஸ்டுகளுக்கு அதிகாரத்திலே கண்! சோஷலிஸ்டுகளுக்கும் அதுதான் குறிக்கோள்! தேசியத் தொழில் ஸ்தாபனத்துக்கு தொழிலாளர் சேவைதான் இலட்சியம்! இருக்க முடியுமா?

விசித்திரமான வாதம்! டிரேட் யூனியன் காங்கிரஸ், காங்கிரஸ் கட்சி-முதலாளிகளின் பாதுகாப்புச் சபையாக-மாறியிருப்பதைக் கண்டு, அக்கட்சியைக் கழித்து விட்டு, கம்யூனிஸ்ட் கைக்குள் அடைக்கலம் புகுந்தது டிலலி ஆளவந்தார்களின் கோணல் போக்கைக் கண்டு. இரயில்வே தொழிற்சங்கம், சோஷலிஸ்டுகளை நாடி அடைந்தது இந்தச் சூழ்நிலை காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கும், அவர்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் கும்பிர்லாஜிகளுக்கும், பயத்தைக் கொடுத்துவிட்டது. தொழிற் சங்கங்கள் சக்திமிக்கவைகள். அதன் எதிர்ப்பு சக்தி ஒன்று திரண்டு எழுந்தால், அதனைத் தடுக்க எந்த அதிகாரத்திறதும் ஆற்றல் இல்லாமல் போகும், அதிகாரமும் தங்கள் கைகளை விட்டுத் தொலைந்துவிடநேரும், இந்த ஆபத்திலிருந்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், தொழிலாளர்களிடம் பிளவை உண்டாக்கி, எந்த வகையிலேனும் தொழிற்சங்கங்களைத் தமது ஏவல்படி நடக்கும் அடிமை ஸ்தாபனங்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனமும், காங்கிரஸ் ஆளவந்தார்களும் ஒன்றாகக் கூடிச் சதியாலோசனை செய்து, மேற்கூறிய முடிவிற்கு வந்தனர் இந்த அதிக்கிரமப் பிரசவத்தில் ஜனித்ததுதான் தேசியத் தொழிற் சங்கம்!

இந்தத் தேசியத் தொழிற் சங்கம், இலட்சக்கணக்கான ரூபாய்களை முதல் போட்டு, தொழிலாளர்களிடைத் தொழில்நடத்த ஆரம்பித்தது! சில நாட்களுக்குள்ளாகவே— நல்ல லாபம்— தொழிலாளர் ஒற்றுமையைக் குலைப்பதில 'வெற்றி' கிடைத்தது முதலாளிகளின் பத்திரிகைகளும், வெகுதாராளமாக, 'அந்த வெற்றிகளை' விளம்பரப்படுத்தி ஆதரவு காட்டின ஒவ்வொரு மாகாணத்துக் காங்கிரஸ் ஆளவந்தார்களும், மற்றத் தொழிற் சங்கங்களைச் சிதைக்க, தங்களிடம் உள்ள அதிகாரத்தைக் கொண்டு, அவசரச் சட்டங்களை அள்ளி அள்ளி வீசி, தேசி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

இந்தி எதிர்ப்புப் போர்

திருவாரூர் திராவிடர் கழக மாநாட்டில், கூடிய சீக்கிரம் இந்தி எதிர்ப்புப் போர் துவக்கப்படும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே கவனித்தீர்களா, என்று அன்பரொருவர் கேட்டுள்ளார்.

கவனித்தோம், மனஎழுச்சியுடன், மகிழ்ச்சி அடைகிறோம்.

இப்போது, அக்டோபர்! பள்ளிக்கூடம் துவங்கியது ஜூனில்!!

இப்போதேனும், 'கூடிய விரைவில்' இந்தி எதிர்ப்புப் போர் துவக்கப்படக்கூடும். என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதே என்பதிலே ஒருவகை மகிழ்ச்சிதான்

ஆனால், அந்தக் 'கூடிய விரைவில்' என்பதற்கு எவ்வளவு நாள், கிழமை அல்லது திங்கள், என்று பொருளோ, நாமறியோம்.

விரைவில் துவக்கட்டும்—திராவிட மக்கள் தந்துள்ள 'வெள்ளித் தோட்டா' இருக்கிறது—வேலை நடக்கட்டும்!— என்று கூறுகிறோம்—விட்டகுறை தொட்டகுறை பட்டுப் போகாததால்.

நம்மைப் பொறுத்தமட்டில்—அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில்—இந்தி எதிர்ப்புப் போர் பற்றி, ஏற்கனவே 'மாலைமணியில்'........ தீட்டப்பட்டுள்ள—கருத்தின்படியேதான் இது பாதும் இருக்கிறோம். அதாவது, இந்தி எதிர்ப்புப் போர் பிரச்னையை பெரியாரின் தலைமையின் கீழுள்ள ஒரு குழுவிடம் ஒப்படைக்காமல், அதுபோலவே நம்மிடமும் விட்டுவிடாமல், இருவருக்கும் பொதுவாக, திரு. வி. கலியாணசுந்தரனாரிடம் ஒப்படைப்பதானால் இந்தி எதிர்ப்புப் போரில், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமது பங்கைச் செலுத்த முனைவர்.

இருந்தவர்கள் போய்விட்டார்களே—இதுகளுக்கு ஒரு கழகம் தழைத்துவிட்டதே என்ற வேண்டப்படாத எண்ணத்தை மறந்து, இந்தி ஒழிக்கப்படவேண்டும் என்பதிலே உண்மையான அக்கறை இருக்குமானால், நாம் கூறியுள்ள யோசனைப்படி நடந்துகொள்வதிலே, பெரியாருக்கு விருப்பம் ஏற்படமுடியும்.

அவர், எதை விரும்புகிறார், இந்தி ஒழிப்பையா அல்லது தலைமைப் பிடிப்பையா, என்பதற்கோர் மகத்தான சோதனை இது. இந்தச் சோதனையை மிக மிக உன்னிப்பாகப் பொது மக்களும், மாகாண, மத்திய சர்க்காரும் கவனித்துவருவது தெளிவுள்ளோர் அறிந்ததுதான். என்ன செய்யப்போகிறார் பெரியார்? இந்தி எதிர்ப்புப் போர், திரு. வி. க. தலைமையில் நடைபெற இடமளிக்கப்போகிறாரா, அல்லது, தமது தலைமைப் பதவியின் செல்வாக்கைத் தனக்கும் தன்னைப் பின்பற்றுவோருக்கும் விளக்குவதற்கும், உற்சாகமூட்டுவதற்கும் மட்டும் பயன்படுத்தப்போகிறாரா, என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது

இதற்கு அவர் இசையவில்லை ஆனால், நீங்கள், ஏதும் செய்யாமலேதான் இருந்துவிடுவீர்களா, என்று கேட்கிறார் அன்பர்.

அன்பரே! அவ்வளவு 'சோடைகள்' அல்ல, பெரியாரை விட்டுப் பிரிந்திருப்பவர்கள்.

எந்தப் பள்ளிக்கூடத்தில் பெரியாரின் தொண்டர்கள் இந்தி எதிர்ப்புப் போர் நடத்துகிறார்களோ, அதற்கு அடுத்த பள்ளியில், முன்னேற்றக் கழகத்தினர் முனைந்து நிற்பர் இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்திக்கொண்டு.

எதற்கும், கூடிய விரைவில் என்பதற்கு விளக்கம் வேண்டும் நமது 'யோசனை'க்கு என்ன பதில் என்பதும் தெரிய வேண்டும்.

'அன்பர்' இதை அங்கு சென்று அவ்வளாவி அறிந்து வந்து நமக்குரைத்தால் நல்லது.

அதிகாரத்தின் இலட்சணம்!

"மலேயா சர்க்கார் கம்யூனிஸ்ட் கலகம் ஏற்படாமல் தடுப்பதாகச் சொல்லிக்கொண்டு இந்தியர், சீனர் முதலியோரைக் கண்மூடித்தனமாகக் கைது செய்கிறார்கள். ரொம்ப கௌரவமானவர்கள்கூட கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்படுகிறார்கள். பொது பந்தோபஸ்துக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாக அல்லது நடந்து கொள்ளக்கூடும் என யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால், அவர்கள் உடனே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகிறார்கள்."

பொய்யை மெய்யாக்க முயலும் திரு. திவாகர்

பெல்காம் நகரில் பல்வேறிடங்களில் காந்தியடிகள் விழாவில கலந்து கொண்டு பேசிய திரு திவாகர், "இராமராஜ்யம் என்பது சர்வதேச சகோதரத்துவமே" என்று கூறி வந்தார்.

பாவம், இராமர் சர்வதேசம் என்னவென்பதையே அறியாதவர். அவர்காலத்தில் அவர் அறிந்திருந்த சர்வதேசம், அயோத்தியும் தண்டகாரண்யமும், கிஷ்கிந்தையும், இலங்காபுரியுமே அவரையாண்ட சகோதரத்துவம். சூத்திரன் தபஸ் செய்ய அருகதையற்றவன் என்பதே.

பட்டமேற்கும் தருணத்தில் அதனை இழந்து, காட்டிற்கேகி, மனைவியைச் சோரவிட்டுப் பின் தேடிப்பிடித்து, மீண்டும் அவளைக் காட்டிற்கு விரட்டி வாழ்ந்த ஒரு புராணக் கதாநாயகனுடைய ராஜ்யத்தைச் சிறந்த ராஜ்யமென மக்களை நம்பும்படியும், அதன்பயனாக புராண மடமையில் மக்கள் அழுந்திப்போகுமாறும் செய்யும் திருப்பணியை அமைச்சர் திவாகர் மேற்கொண்டிருப்பது வருந்தத்தக்குரிய செயலாகும். இவ்வாறு சர்வதேசத்தையோ, சகோதரத்துவத்தையோ அறியாது ஆட்சி செய்த ஒருவரின் இராஜ்யத்தைச் சர்வதேச சகோதரத்துவ ராஜ்யம் என்பது பொய்யை மெய்யாக்கி, மக்கள் அதனை நம்பிப் பாழாகுமாறு செய்வதேயாகும். இந்த வேலையைப் பொறுப்பான பதவிகளிலிருப்போர் செய்வது பெரிதும் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

மாலை மணி

சென்னை 5—10—49 புதன்கிழமை

எந்த வழிச் :: :: சிறந்த வழி?

கூடிவாழும் முறையை மனிதன் கற்றுக்கொண்டதற்குப் பிறகுதான், சமுதாயம் உருவெடுக்கலாயிற்று.

மனிதன் தன்னந்தனியாக உலாவிக்கொண்டிருந்த காட்டுமிராண்டி காலத்தில், தன் தேவையைத் தானே நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய அவசியமுள்ளவனாக இருந்தான். சமுதாயம் உருவான பிறகு, மக்களுக்குத் தேவை அதிகப்பட்டது. தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள, மக்களின் உழைப்பு பங்கிடப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கூட்டு உழைப்பிலும், கூட்டு உற்பத்தியிலும், கூட்டுப் பங்கீடுகளிலும் முறை ஏற்பட்டாலதான், இன்றைய உலகத் தேவையை நிறைவேற்றி வைக்கமுடியும் என்ற அளவுக்கு நாகரிகம் வளரத் தொடங்கிவிட்டது.

மனிதத்தேவைக்கேற்றவசதிகளை எப்படிச்செய்து தருவது என்பதிலேதான், உலக நாடுகள் பலவும், கண்ணுங்கருத்துமாய் இருந்து பாடுபட்டு வருகின்றன. வசதிகள் பெருக வேண்டுமானால், உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தியைப் பெருக்க, இயந்திரங்களே ஏற்ற சாதனம்; இயந்திரங்களை அடைய, விஞ்ஞான வளர்ச்சியே ஏற்ற வழியாகும்; என்ற கொள்கையின் அடிப்படையில் நின்று, மேலை நாடுகளெல்லாம் முன்னேறி வருகின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கவும், இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கும் காந்தீயப் பக்தர்கள் பலரும், குடிசைத் தொழிலே பொருளாதார முன்னேற்றத்துக்குத் தக்க வழியாகும் என்றும், அவரவர் தேவையை அவரவரே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள். ஆனால், மக்களின் தேவை குடிசைத் தொழில் பொருள்களை மட்டும் கொண்டு வாழ்வதோடு அமைந்துவிடுகிறதா என்றால், இல்லை! குண்டூசியிலிருந்து அணுகுண்டுவரையில் பலவும் தேவைப்படுகின்றன! இவைகளையெல்லாம் குடிசைத் தொழிலுக்குச் செய்து தரத் தெரியாது; விஞ்ஞானவழி பிறந்த இயந்திரத் தொழிலுக்குத்தான் தெரியும்!

ஒரு பக்கத்திலே கைராட்டை நூற்பு; மற்றொரு புறத்திலே உற்பத்தி பெருகவேண்டும் என்ற கூச்சல்! இரண்டு செயல்களும் ஒன்றுக்கொன்று பொருத்தமுடையதுதானா? ஒன்று கைராட்டையைச் சுற்றுவதை நிறுத்திவைத்துவிட்டு, உற்பத்தியைப் பெருக்கும் இயந்திர சாதனங்களைக் கைக்கொள்ள வேண்டும், அல்லது கைராட்டையின்மீது வைத்துள்ள 'பக்தியை' நீக்கிக்கொள்ள மனமில்லையென்றால், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற கூச்சலையாவது நிறுத்தவேண்டும். இரண்டிலே ஏதாவது ஒன்றைச் செய்வதுதானே சரியானதாகும்.

காந்தியாரின் பிறந்தநாள் விழாவையொட்டி, வானொலியில் ஒலிபரப்புச் செய்யும்போது, இந்தியாவின் உதவிப் பிரதமர் சர்தார் பட்டேல் **"நமக்குத் தேவையான சாமான்களை எல்லாம் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய நாம் முயற்சிக்க வேண்டும்"** என்று கூறியுள்ளார். தேவையான சாமான்கள் ஏராளமாக இருக்கின்றன; அவைகள் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி ஆகவேண்டியிருக்கின்றன; ஆகவே அவைகளை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய நாம் முயற்சிக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவது மகிழ்ச்சி தரக்கூடியதுதான். ஆனால் நாம் சர்தாரைக் கேட்க விரும்புவது, உற்பத்தி, இயந்திரத்தினால் கூடுமா? அல்லது குடிசைத் தொழிலால் கூடுமா? என்பதேயாகும். குடிசைத் தொழிலால் கூடும் என்று சர்தாரே கூறத் துணியாரே? சர்தார் வீற்றிருக்கும் அரசாங்கம் தீட்டும் சில திட்டங்களும் கூறத் துணிவு கொள்ளவில்லையே!

மேலும் கூறும்போது, **"நம்மால் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களைக் கூடிய மட்டும் குறைவாக உபயோகிக்க வேண்டும்"** என்று உபதேசமும் புரிகிறார் சர்தார். மனித நாகரிக வளர்ச்சி, பலவசதிகளைக் கொண்டல்லாமல், வாழ முடியாத நிலையில் மக்களைக் கொண்டுவந்து வைத்திருக்கும்போது, அவைகளைக் குறைத்துக் கொள்ளக் கூறினால், குறைத்துக் கொள்ளத்தான் முடியுமா—இயலுமா—குறைத்துக் கொள்ளத்தான் வேண்டுமா? அல்லது குறைத்துக்கொள்ளத்தான் சர்தாரால் முடிகிறதா? பேனா, கடிகாரம், மின்சாரவிளக்கு, மோட்டார், இரயில், ஆகாய விமானம், இவை போன்ற வசதிகளை எப்படிக் குறைத்துக்கொள்ள முடியும்! "இவைகளையெல்லாம் இந்த நாட்டிலேயே உற்பத்திச் செய்ய, இதோ திட்டம் தருகிறேன், அதன்படி நடந்து தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுங்கள்" என்றல்லவா கூறியிருக்கவேண்டும், ஒரு ஆட்சியின் பொறுப்புவாய்ந்த பதவியிலிருப்பவர். ஆனால் மேலும் சர்தார் கூறுகிறார், **"நம் சொந்த முயற்சியின் மூலமே சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று காந்திஜி விரும்பினார்"** என்று.

சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வாழும் ஆதி நாள் வாழ்விலிருந்து, எவ்வளவோ நாகரிகக் கூட்டுவாழ்வு முயற்சிக்கு, மனிதன் தள்ளிக்கொண்டு வரப்பட்டிருக்கிறான் இன்று. குடிசைத் தொழிலை நம்பி, சுயதேவைகளை அவரவர் பூர்த்திசெய்துகொள்ளக் கூடிய சூழ்நிலையிலா நாம் வாழ்கிறோம்? இல்லை! இல்லவே இல்லை!

வசதிகளைக் குறைத்துக்கொள்ள யாராலும் இயலாது என்பது மட்டுமல்ல, இன்றியமையாத வசதிகளைக்கூடப் பெற முடியாமலே இந்நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் வாழ்கிறார்கள். இன்றியமையாத வசதிகளை மக்கள் அனைவரும் பெற்று, இன்றைய நாகரிக உலகில் மற்ற நாடுகளோடு சமமாக நிற்க வேண்டுமானால், உற்பத்திப்பொருள்கள் நிச்சயம் பெருக்கப்பட வேண்டும்; உற்பத்தி பெருக்கப்பட வேண்டுமானால், குடிசைத் தொழிலை நம்பி பழங்காலத்துக்குத் திரும்புவதல்ல; இயந்திரத் தொழிலை ஆதரித்துப் புது உலகத்திற்குச் செல்வதேயாகும்!

குடிசைத்தொழில்:— மனிதனுடைய முழுத்தேவையையும் பூர்த்தி செய்வதில்லை; உழைப்பை மிகவாகக் கொள்வது; எதிர்பார்க்கும் பலன் மிகக் குறைவானது; அடையும் இன்பமும் கொஞ்சம்தான்.

இயந்திரத்தொழில் - மனிதனுடைய தேவையை அவன் விரும்பும் அளவுக்குப்பூர்த்தி செய்து தரக்கூடியது; மனிதனுடைய உழைப்பைக் குறைத்து வேறுபல வேலைகளில் கவனத்தைச் செலவிட அவனுக்கு ஓய்வு தருவது; எதிர்பார்க்கும் பயன் பயப்பது; நிறைந்த இன்பம் விளைவிப்பது.

குடிசைத்தொழில், தொழிற்துறையின் ஆரம்ப சாதனம்; இயந்திரத்தொழில் அந்த ஆரம்ப சாதனத்தின் வளர்ச்சி! உற்பத்திக்கு இரண்டு வழிகள் எதிரிலே நிற்கின்றன. இரண்டில் **எந்த வழிச் சிறந்த வழி?** தேவையான வழி?— பலன் கொடுக்கக்கூடிய வழி?

குற்றமுள்ள நெஞ்சு!

"அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனம், சோஷலிஸ்டுக் கட்சியினர் கை பொம்மையாகிவிட்டது. அந்த ஸ்தாபனத்தை சோஷலிஸ்டுக் கட்சியினர் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவே, உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். எனவே, இந்திய தேசிய ரயில்வே தொழிலாளர் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது."

(அ. இ. தே. தொ. ச.)

—ஹரிஹரநாத சாஸ்திரி.

உலக்கூடம்

['சம்மட்டி']

கடவுள் கோபிக்கிறார்?

"என்னை, என்ன என்றுதான் மதிப்பிட்டிருக்கிறார்களோ, ஹிந்து மதபரிபாலனபோர்டார் முக்காலமும் உணரும் ஆற்றல் இல்லை என்றுதான் தீர்மானித்து விட்டார்கள் போல் தெரிகிறது. யார் யாருக்கு என்ன என்ன வேண்டும், எப்பொழுது எப்பொழுது வேண்டும், எந்தெந்த அளவிற்கு வேண்டும், எந்தெந்த நாட்டிற்கு எது எது தேவையாக இருக்கின்றன என்பதை எல்லாம் உணர்ந்து கொள்ளும் ஞானக்கண் எனக்கு இல்லை என்றுதான் முடிவிற்குவந்துவிட்டிருக்கிறார்கள் போலும்! என் பேரறிவை, மகத்தான ஆற்றலை அலட்சியம் செய்து வருகிறார்கள் இந்த அதிகாரிகள்!

"மக்களுக்கு மழை தேவைப்படுகிறதா இல்லையா, எவ்வளவு மழை இருந்தால் போதும், எவ்வளவு மழையை மக்கள் விரும்புகிறார்கள் என்பதையெல்லாம், என்னால் தெரிந்து கொள்ள முடியாது போலவும், தேவையான மழை ஒரு கோடி குடமா அல்லது இரண்டு கோடி குடமா என்றெல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு, மக்கள், எனக்கு, தங்கள் பிரார்த்தனை மூலம் மனு செய்துகொண்டால் தான், நான் மழை பெய்விப்பேன் என்று, என் மீது மக்கள் தப்பபிப்பிராயம் கொள்ளும் முறையில், அதிகாரிகள் விஷமம் செய்கிறார்கள்! நான் ஏதோ, என் மக்களின் சுகதுக்கங்களை மறந்து, பரிகாரம் தேடுவதை உதறித் தள்ளிவிட்டு, என் இலக்கிழத்தியோடு சதா சர்வகாலமும் கொஞ்சிக் குலாவிக்கொண்டு இருப்பது போல, என்னைப்பற்றி சில விஷமிகள் விஷமப் பிரசாரம் செய்வதற்கும், இந்த அதிகாரிகளின் உத்திரவு உதவுகிறது!

"என் கடமை என்ன என்பதை நான் அறியாத அற்பனா? அல்லது அறிவிலியா? மக்களுக்கு நலம் தேடும் நல்லெண்ணம் இல்லாதத் தீயவனா? மக்களைக் கொடுமைப்படுத்தி, அவர்கள் படும் துன்பத்தில் இன்பம் காணும் துன்மார்க்கனா? அன்பர்களை அலட்சியப்படுத்தும் அகம்பாவியா? கடமையைக் காலாகாலத்தில் செய்ய மறக்கும் கயவனா? பொறுப்புணர்ந்து நடந்துகொள்ளாத புல்லனா? மக்கள் கண் முன்னர்; மக்களை மறந்த மதோன்மத்தன் என்ற பழிச்சொல்லை, ஏன், எனக்கு வாங்கித்தரும் அக்கிரமத்தைச் செய்கிறார்கள் இந்த அதிகாரிகள்?

"எனக்கு இருக்கும் பொறுப்புணர்ச்சியை, இந்த அதிகாரிகள் நினைவுறுத்தினால்தான், நான் நன்கு நிறைவேற்றுவேன் என்று ஆணவம்கொண்டு, அதற்கான ஆணையைப் பிறப்பித்தால், என்னை மக்கள் தூற்றவும், ஒதுக்கித் தள்ளவுமான ஒழுக்கக்கேடல்லவோ நாட்டில் ஏற்பட்டுவிடும். நான்ஒருவன் இருக்கிறேன் என்று நம்பாது, நாஸ்திகர்களாக அல்லவோ மக்கள் மாறி விடுவார்கள்! ஏன், இதெல்லாம் இந்த அதிகாரிகளுக்குப் புரிவதில்லை? அவசரம் அவசரம்! அறியாமை அறியாமை!

"ஒரு ஜில்லா கலெக்டர், தன் கீழ் வேலை செய்யும் ஒரு குமஸ்தாவிடம் கொஞ்சம் தாராளமாக நடந்துகொண்டால், அதை அந்த குமஸ்தா எந்தெந்த வகையில், சுய நலத்துக்காகப் பயன் படுத்திக்கொண்டு, மக்களை மிரட்ட ஆரம்பித்து விடுகிறார்? அதனால் அந்தக் கலெக்டருக்கும் எவ்வளவு கெட்ட பெயர் வந்துசம்பவிக்கிறது? கலெக்டரின் உண்மையானக் கடமை உணர்ச்சியையும் கூடவல்லவோ மக்கள் சந்தேகிக்கத் தொடங்கிவிடுகின்றனர்? கலெக்டரென்றால், வெகு அலட்சியமாக அல்லவா, மக்கள் பேசவும், ஏசவும் முன்வருகின்றனர்! குமஸ்தாவின் சொல்லுக்குச் சலுகைக் காட்டி நடக்கும், ஒரு ஜில்லா கலெக்டரின் கதியே இதுவானால், என் கதி என்னவாகும்? என் நிலைமை எப்படித்தான், நான் மக்களுக்கு விளக்கிக் கூறுவது? நான் செய்யாதக் குற்றத்துக்கு, மக்களால் தரப்படும் தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானா? அதிகாரிகளின் அவசியமற்ற—அர்த்தமற்ற—நாஸ்திகத்தைப் பரப்புகின்ற அறியாமைத்தனத்தை என் சாபாகவும், என் பக்தமித்திரர்கள், புத்திர புத்திரிகள் சார்பாகவும், வன்மையாகக் கண்டிக்கிறேன்."

நாட்டில் பருவமழை தவறி, தண்ணீரில்லாமல் மக்கள் கஷ்டப்படுவதைக் கண்ட, ஹிந்து மத பரிபாலன போர்டார், ஆலயங்களில் அர்ச்சனை, பிரார்த்தனை செய்யவேண்டுமென்று, கோயில்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருந்தனர். இப்பொழுது மாகாணத்தில் திருப்திகரமான அளவிற்கு மழை பெய்துவிட்டதால், அதற்கான பிரார்த்தனைகளை இனிச் செய்யவேண்டாம் என்று, முன் போட்டிருந்த சுற்றறிக்கையை திரும்பப் பெற்றுக்கொண்டனர். அதுபற்றி 'ஆண்டவன்' எனக்கு அனுப்பியிருந்த கண்டனக் குறிப்பை, போர்டாருக்கு அனுப்பி இருக்கிறேன்!

முக்காலணு மும்மூர்த்திகள்!

முக்காலணா கொடுத்துவிட்டால் போதும், மூன்று தெய்வங்களை ஒருசேரக் கண்டுகளிக்கலாம்! பார்த்து மகிழ்வதற்கு மட்டுமல்ல! பூஜை அறையில் கூட வைத்துப் பூஜிக்கலாம்! காத்துக்கருப்பு அண்டாமல் இருக்க வேண்டி, சிலர், முருகன் தாயத்துகள், பராசக்தி தாயத்துகள் போன்றவைகளைக் கைகளில் கட்டிக்கொள்ளுகிறார்களே, அது போலக்கூட, இதனைப்பயன்படுத்திக்கொள்ளலாம்! சட்டை அணிபவர்கள், சட்டைப்பைக்குள் வைத்துக்கொள்ளலாம். சட்டை அணிந்து பழக்கமில்லாதவர்கள் மடியில் வைத்துக் கொள்ளலாம்! கந்தல் துணிக்கும் வழி இல்லாமல், கோவணத்தோடு பறந்த மேனியாகத் திரிபவர்கள், தங்கள் தங்கள் நெற்றியிலாவது, மார்பிலாவது, முதுகிலாவது ஒட்டி வைத்துக் கொள்ளலாம்! ஒட்டுவது சிரமமாக இருக்குமானால், நல்ல நூல் கயிற்றால் கட்டியாவது வைத்துக் கொள்ளலாம்!

காலையில் எழுந்து ஒருமுறை அதனைப் பார்த்தால், பாக்கியவான்களுக்கு ஓர் யோகம்தான். குருடர் விழி பெறுவர்! முடவர் நடந்து செல்லும் நிலை அடைவர்! குஷ்டரோகிகள் குண

அனுமானைப் பின்பற்றுங்கள்! என்றும் அடிமையாயிருக்கலாம்

புதுடில்லியில் நடைபெற்ற தசராக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட இந்திய கவர்னர்-ஜெனரல் திரு சி. இராஜகோபாலாச்சாரியார், மக்களுக்கு அறிவுரை கூறச் சான்றாக அகப்பட்டவர் அனுமான்தான். சாக்ஷாத் இராமாயணக் குரங்குதான். எல்லோரும் அனுமானைப் பின்பற்ற வேண்டுமென்று கவர்னர் ஜெனரல் உபதேசம் செய்தார் அக் கொண்டாட்டக் கூட்டத்தில்.

அனுமாரின் வரலாற்றைப் புரட்டி அவர் வாழ்ந்தது போல நடந்து கொள்வது என்று எவரும் கருதிவிட வேண்டாம். புராணப்படி அனுமான் தன் தாயாரின் கள்ளக் காதலனுக்குப் பிறந்தவன். பிறந்தவுடன் சூரியனைப் பழமென எண்ணி விழுங்கச் சூரிய மண்டலம் பறந்தவன். பின் இராமனுக்காகத் தன் நாட்டைக் காட்டிக் கொடுத்தவன்; தன் சுயப் பகுத்தறிவுக்குச் சற்றும் இடம் வைக்காமல் சிந்தனை என்பதை அறியாமல் குருட்டுப் பக்தியில் சிறந்தவன். அதனால் புராணக்காரர்கள் அனுமானைச் சிரஞ்சீவியாக்கினர்; சகல கலா வல்லவனாக்கினர்.

எனவே, கவர்னர் ஜெனரல் அனுமானைப் பின்பற்றுமாறு கூறுகிறார் என்றால் புராணத்தில் கூறப்பட்ட "[illegible]" (செப்பிடு வித்தைகளை)ச் செய்வதற்கன்று.

அனுமான் எவ்வாறு பகுத்தறிவற்று, சிந்திக்கும் சக்தியை மறந்து குருட்டுப் பக்தக்காரனாக, சாவடிமையாக ஆகிவிட்டானோ அது போன்று எல்லா மக்களும் ஆகிவிட வேண்டும் என்பதுதான் தோழர் ராஜாஜியின் ஆசை. ஆனால் இது தசரதன் வாழும் காலமல்லவே. இராமன் ஆட்சிக் காலமல்லவே. இப்போது மக்கள் பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்திக்கத் தொடங்குகின்றனரே! இப்போது எவராவது வெட்கமில்லாமல் தம்மை அனுமான் என்று கூறிக்கொள்வாரா? இவ்வாறு கூறிக் கொள்ள முன்வரும் ஆள் எத்தகையவராக இருக்க வேண்டும்!

மடைவா! வீணர்கள் ஆனந்தம் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றுவிடும்! இவ்வளவும் பொய்யாகிவிட்டாலும், நமக்கு நஷ்டம் கொஞ்சம்தான்—முக்காலணாதான்!

காசைச் செலவிடாதீர்கள்! இதுவரையில் நாம் தபால்கார்டு, கவர் வாங்கினால், நமக்கு வேண்டியவர்களுக்குச் சேதி எழுதத்தான் பயன்படுத்தி வந்தோம். இனி மேற்கூறியுள்ள பக்தி மார்க்கத்திற்கும், தபால் கார்டுகளைப் பயன்படுத்துவதற்கான, ஆரிய வாய்ப்பினை, நமது மதம் கலவாத இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது! இன்னும் ஒரு பதிமூன்று நாள் பல்லைக் கடித்துக்கொண்டு— நாக்கைக் கடித்துக் கொள்ளப் போகிறீர்கள்-பொறுத்து இருங்கள்! மும்மூர்த்திகள், சென்னை ஜெனரல் போஸ்ட் ஆபீசுக்கு இம்மாதம் 17-ந் தேதி விஜயம் செய்யப் போகிறார்கள்! சில நாள் கழித்துத்தான் மற்ற ஊர்களுக்கெல்லாம் வருவதாகக் கண்டிப்பாகத் தீர்மானித்து விட்டிருக்கிறார்கள்! அவசரமாக இருக்கிறவர்கள், முக்கால் முக்கால் அணா எடுத்துக்கொண்டு, சென்னை ஜெனரல் போஸ்டாபீசுக்குப் படையெடுங்கள் குறித்த தேதியில்! மூன்று காலணா துட்டுகளாக மட்டும் எடுத்துக்கொண்டு செல்ல மறந்துவிடாதீர்கள். மறந்தீர்களோ மும்மூர்த்திகள் தரிசனம் கிட்டாது- கண்டிப்பாகக் கிட்டாது!

மந்திரத்தால் மாங்காய் விழவைக்கும் வித்தை

(0)

இந்துமத அறநிலையக் குழுவின் விந்தைச்செயல்

கடந்த சில மாதங்களுக்கு முன் தென்னாட்டில் பல கோயில்கள் யாகசாலைகளாக மாறின. திடீரென நம்நாடு கிரேதாயுக காலத்திற்கு மாறிவிட்டதோ என்று ஐயுறும் அளவிற்கு அங்கங்கே யாகசாலைகளும் யாகம் நடத்துவிக்கும் குழுவினரும் தோன்றினர். வேத கோஷங்கள் காதைப் பிய்க்குமாறு கேட்டுக் கொண்டிருந்தன. ஆனால் மழை என்னவோ, அது பெய்ய வேண்டிய பருவத்தில் தான் பெய்ததே ஒழிய இந்த யாகங்களைக் கண்டோ, வேதகோஷங்களைக் கேட்டோ பெய்யவில்லை.

இந்த யாகங்களுக்காக வென்று மட்டும் தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள செலவு லட்சக்கணக்கான ரூபாய்கள் என்று அறிகிறோம்.

இவ்வாறு திடீரென யாகசாலைகள் முளைத்தமைக்கும், வேத கோஷங்கள் கிளம்பினமைக்கும் காரணம் இந்துமத அறநிலையக்குழுவினர், மழைக்காக வேண்டிய பிரார்த்தனைகள் செய்யுமாறு கடந்த பிப்ரவரியில் சுற்றறிக்கை விட்டிருந்தனர் என்று தெரிகிறது. இந்த வகையில், கற்றவர்களை அதிகாரிகளாகக் கொண்ட ஒரு குழு, மந்திரத்தால் மாங்காயை விழவைக்கலாம் என்று நம்பி, அவ்வாறு செய்யுமாறு சுற்றறிக்கை வேறு விடுத்து, மக்களை மடமைத்தனத்தில் ஆழ்த்தும் பணியை மேற்கொண்டு, பொதுமக்கள் பணத்தைப் பாழாக்கும் பணியில் தலையிட்டுக் கொண்ட விந்தைச் செயலைக் கண்டு எந்தப் பகுத்தறிவு உடையவரும் வருந்திக் கண்டிக்காமலிருக்க முடியாது. கோயில்களில் 'பெருச்சாளிகள்' கோயிற் சொத்தைத் தின்றுவிடாதபடி கண்காணித்து, கோயில் நிர்வாகத்தினை ஒழுங்குபடக் கவனித்து வருவதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இக்குழு, மக்களிடை மடமையை வளர்ப்பதற்குப் பணியாற்றுகிறதென்றால் இந்தக் கேட்டை என்னென்று கூறுவது?

மழை இப்போது வேண்டிய அளவு பெய்து விட்டபடியால், இனிப் பிரார்த்தனை தேவையில்லை என்று ஒரு சுற்றறிக்கையை அந்தக் குழுவினர் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

பிரார்த்தனையால் எல்லாம் பலித்து விடுகிறதென்றால், இதில் நம்பிக்கையுள்ள அனைவரும் சேர்ந்து, பகவான்கள், ரிஷிகள், யோகிகள் முதலியோரையும் துணைக்கு வைத்துக் கொண்டோ, அல்லது அவர்கள் தலைமையில் நின்றோ, பிரார்த்தனையாவது யாகமாவது செய்து, நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தை விரட்ட வழி செய்யலாமே! பற்றாக்குறை என்ற பேச்சை ஒழித்துக்கட்டி விடலாமே! அன்றி நந்தனாருக்காக ஒரே இரவில் ஆயிரம் வேலி பயிராக்கச் செய்த ஆண்டவன், இந்தப் பக்தர்களுக்காக, மகரிஷிகளுக்காக, யோகிகளுக்காக, பகவான்களுக்காக, 10,000 வேலி நிலத்திலாவது ஒரே இரவில் முடியாவிட்டாலும், ஒருமாதகாலத்திற்குள்ளாவது பயிர் விளையச் செய்யமாட்டாரா? நந்தனார் பெற்றிருந்த அருளை இந்தப் பக்தர்கள் திருக்கூட்டத்தில் ஒருவராவது பெறவில்லையா? ரமண பகவான், அரவிந்தயோகி மற்றும் பல மகரிஷிகள், சரஸ்வதிகள், மடாதிபதிகள் அண்டு கம்பெனியில் நந்தனாரைப் போன்ற அருள் படைத்தவர் ஒருவருமில்லையா?

இல்லையென்றால் பொதுமக்கள் அறிவையும் பணத்தையும் பாழாக்கும் வேலைகளில் இந்துமத அறநிலையப் பாதுகாப்புக்குழு போன்றவை ஏன் இறங்கவேண்டும்? மக்களை ஏமாற்றும் வித்தைகளை ஏன் செய்ய வேண்டும்? மடமையைப் பரப்பும் பணிகளைச் செய்ய வேண்டிய அவசியம் இவைகளுக்கு எங்கிருந்து ஏற்பட்டது? இத்தகைய ஸ்தாபனங்கள் செய்யும் இது போன்ற தீச்செயல்களை அரசாங்கம் கவனித்து, இனி இத்தகைய தவறுகள் நடவாதிருக்க முயலுமா?

அமெரிக்கப் பள்ளிகளில் மாணவர்கள்

194[illegible] செப்டம்பர் இறுதியில் எடுக்கப்பட்ட புள்ளி விவரக் கணக்குப்படி, அமெரிக்காவின் ஆரம்ப பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 2,35,00,000 ஆகும். உயர்தரப்பள்ளிகளில் பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 66,00,000 ஆகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்கும் மாணவர்களின் தொகை 24,00,000 ஆகும். ஆறு வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கை, மற்றத் தனித்தனி வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகமானதாக விளங்குவதாகும். அவர்கள் எண்ணிக்கை-29,00,000. அங்கு வசதிகள் செய்து தரப்படுகின்றன- பலவேறு துறை அறிவும் புகட்டப்படுகின்றன- நன்கு பயிற்சி தரப்பட்ட ஆசிரியர்கள் நல்ல சம்பளத்தில் அமர்த்தப்படுகிறார்கள்.

பாராட்டுதலை விடப் பணியிலிறங்குவதுமேல்

"முன் காலத்தில் செல்வர்கள் கோவில்களுக்கும் சத்திரங்களுக்கும் பணம் கொடுத்துதவினர். இப்போது இக்காலப் போக்குக்கு ஏற்ப பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும் கட்ட ஆங்காங்கே பலர் முன்வந்திருப்பது நாட்டின் வருங்காலத்திற்கு நல்ல அறிகுறி."

என்று, பொருளமைச்சர் திரு. கோபால்ரெட்டி பாளையங்கோட்டை நகர சபையில் பேசினார்.

பொருளமைச்சரின் பாராட்டுதல் பாராட்டத்தக்கது. ஆனால் நாட்டின் நல்ல நிலைமைக்-குறிக்கோளான செயலை, முன்காலச் செல்வர்கள் கட்டி வைத்த கோயில்களின் வருமானத்தைக் கொண்டும் செய்யலாமே! அந்த வருமானங்கள் திருவிழாக்களின் பெயராலும், யாகயோகங்கள், பிரார்த்தனைகளின் பெயராலும் பாழாகின்றனவே, செல்வர்களின் செயலைப் பாராட்ட முன்வந்த பொருளமைச்சர் கோபால்ரெட்டி பாழான துறையில் செலவிடப்படும் கோயில்களின் வருமானத்தை இக்காலத்துக்கேற்ற நல்ல வழியில் செலவிட என்ன ஏற்பாடு செய்துள்ளார்? இதுவரை செய்யவில்லையெனின் இனியாவது செய்ய எண்ணியிருக்கிறாரா? பிறர் செயலைப் பாராட்டிக் கொண்டே காலத்தைக் கழித்து விடுவதால், நாடு முன்னேறிவிட முடியுமா? செல்வர்கள் தாமே மனமுவந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நற்பணிகள் புரிந்துவிட்டால் மட்டும் போதுமா? அரசாங்கம் இதில் அக்கறை கொண்டு பாழாகும் பணங்களைத் தடுத்து நல்ல வழியில் பயன்படுத்த முன்வர வேண்டாமா? இனியாவது கவனிக்குமா அரசாங்கம்!

மாணவர்களுக்கு வசதி!



பாடசாலைக்கு நடந்து வந்து சேர முடியாதபடி, தொலைவிலுள்ள மாணவர்களைக் கொண்டுவந்து சேர்க்க அமெரிக்காவில் பஸ் போக்குவரத்துகள் அரசாங்கத்தினரால் இலவசமாக விடப்படுகின்றன. பள்ளி மாணவர்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்காகப் பஸ்கள் காத்துக் கொண்டிருக்கும் காட்சியே படத்தில் காட்டப்பட்டிருப்பதாகும்.

கழகத் தோழர்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் சார்பாக ஆங்காங்கு துவக்க விழாக்களை மிகச் சிறப்பான முறையில், அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய பண்புகளின் அடிப்படையில் நின்று கொண்டாடும்படி கிளைக் கழகச் செயற்குழுவினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிளைக் கழகங்களின் சார்பாக நடைபெறும் பொதுக் கூட்டங்களுக்கென்று அச்சிட்டு வழங்கும் துண்டு அறிக்கைகளில், ஒவ்வொரு பிரதியையும், தலைமைக் கழகத்தின் சேகரிப்பில் (பைலில்) வைத்துக் காப்பாற்றும் பொருட்டு, அனுப்பி வைக்கும்படி, கிளைக் கழக விளம்பர உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிரசாரத்திற்குச் செல்லும் சொற்பொழிவாளர்கள், கழகத் தோழர்களின் விருப்பத்தைக் கூடுமான வரையில் நிறைவேற்றிவைத்து, ஆங்காங்குப் பொதுக்கூட்டங்களைச் சிறப்புற நடத்தித் தரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
செயலாளன்,
தி. மு. க பிரசாரக் குழு.

இனி நடப்பவை

சண்முகபுரம் (தூத்துக்குடி)— இவ்வூர் சர். ஏ. டி. பன்னீர் செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டமொன்று, சங்கக் காரியாலயத்தில் 9-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் ஷை சங்கத்தின் புது நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது பற்றியும், சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கும் முடிவை ஆதரித்து அதன் கொள்கைக்கிணங்க இயக்க வேலைகள் துவங்குவது பற்றியும் ஆலோசிக்கப்படும். எனவே, நிர்வாக உறுப்பினர்கள் தவறாது வரும்படித் தோழர் செல்லத்துரை (செயலாளர்) அழைக்கிறார்.

திராவிட மறுமலர்ச்சிக் கழகம்

காஞ்சீபுரம், செப். 28— சின்னகாஞ்சீபுரம் திராவிட மறுமலர்ச்சிக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர் கூட்டம் இன்று இரவு நடைபெற்றது. மாகாணத் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பணியாற்றுவதாக முன்பு தீர்மானித்ததை மீண்டும் வலியுறுத்தியும், ஷை கழக 2வது ஆண்டு விழாவையும், தி. மு. கழகத் துவக்க விழாவையும் 23—10—49ல் கொண்டாடுவதென்றும், தீர்மானிக்கப்பட்டது. ஆண்டு விழா வசூல் கமிட்டி அமைக்கப்பட்டு, செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. என்று தோழர் ஜி. எஸ். மணி (செயலாளர்) எழுதுகிறார்.

ஏஜெண்டுகளுக்கு

பில் கிடைக்கப்பெற்றுள்ள ஏஜெண்டுகள் தங்கள் பாக்கியை 8—10—49க்குள் பணம் அனுப்பாவிட்டால் கட்டாயம் பத்திரிகை நிறுத்தப்படும்.

மானேஜர்

தேசீயத் தொழிற்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யத் தொழிற் சங்கத்திற்கு உறுதுணை புரிந்தனர்! சர்வ தேசத் தொழிலாளர் மாநாடுகளில் பங்கு கொள்ளும் உரிமையை, டிரேட் யூனியன் காங்கிரசிடமிருந்து பறித்து, தேசீயத் தொழிற்சங்கத்திற்கு முடி சூட்டினர்! தேசீயத் தொழிற் சங்கமும் அகில உலக அந்தஸ்துப் பெற்று விட்டது! ஹரிஹரநாத் சாஸ்திரிகள் ஆபாட்டப் புரியனாகப் போய் விட்டார்கள்!

இத்தகைய திருக்கல்யாண குணங்களைக் கொண்டிருப்பது தான தேசீயத் தொழிற் சங்கக் காங்கிரஸ் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பிற அரசியல் கட்சிகளிடம் தொழிற் சங்கங்கள் இருக்கக் கூடாது என்ற, 'ஆண்டவன்' கட்டளை ஒன்றும் கிடையாது! இங்கிலாந்தில் இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பது பிரிட்டிஷ் டிரேட் யூனியன் காங்கிரஸ்தான் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. படிப்படியாக சோஷலிசத்தை அடைவதுதான், அந்தக் கட்சியின் அடிப்படைக் கோட்பாடு.

தங்களுக்கு என கன்சர்வேடிவ் கட்சியின் 'மூலக் கருத்தை'த் தாங்கி நிற்பதற்கு என ஒரு தொழிற் சங்கத்தைக் காணும் பணியில், சர்ச்சில், — எவ்வளவு பிற்போக்குவாதியாக இருந்த போதிலும்— மாறு மனத்தினராக இருந்த போதிலும்—தான் அதிகாரத்தில இருந்த காலத்திலும் சரி, இல்லாதிருக்கும் காலத்திலும்சரி -ஈடுபடவில்லை - அதனை விரும்பவில்லை. ஜனநாயக உணர்ச்சியின் சாரம்சம் அது தான்.

ஜெர்மனியில்,இங்கு ஹரிஹரநாத் சாஸ்திரியார் புரிந்துவரும் பணியை, நாஜியர் புரிந்தனர்—வெற்றி கண்டனர்! வேறு அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தில இருந்த தொழிற் சங்கங்களை எல்லாம் சிதைத்தனர். இணங்காதவர்களைத் துன்புறுத்தினர்; சொந்தத் தொழிற் சங்கங்களையும் கண்டனர். நாஜிகள் முடிவு அறிந்ததே! தொழிலாளர் நன்மை பாதுகாக்கப்படவில்லை! ஹிட்லரின் ஆதிக்க வெறிக்குப் பலியாக்கப்பட்டது! இது ஜனநாயகம நீங்கிய-பாசிசப்பண்பு!

தேசீயத் தொழிற்சங்கம்; அதன் மறுபதிப்பு-மறக்க முடியாது - மறைக்கவும் முடியாது இதனை!

தென்னாட்டிற்கு வந்து இருக்கிறார் தேசீயத் தொழிற்சங்கத்தின் செயலாளர் ஹரிஹரநாத் சாஸ்திரி. தொழிற்சாலைகள் நிறைந்துள்ள நகரங்களுக்கெல்லாம் சென்று, தொழிலாளர்களுக்குப் 'பணி'புரிகிறார்!

ஹரிஹரநாத் சாஸ்திரியாரின் தென்னாடு விஜயத்திறகும், சென்னை சர்க்கார் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலிருந்ததாகச் சொல்லப்படும் இருபது தொழிற்சங்கங்களைச் சட்டவிரோதமானதாகச் செய்துவிட்டிருப்பதற்கும், எந்தவிதத் தொடர்புமில்லை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்! குட்டையைக் குழப்பி மீன் பிடிப்பது என்பது, இந்த விஷயத்தில் பொருந்தாது! முக்காலும் பொருந்தாது!

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

ஈரோடு—கிளை

ஈரோடு, அக். 2—

2—10—49 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு மண்டபம் வீதியில் உள்ள கழகக் கட்டிடத்தில், முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் நடந்தது. தோழர்கள் என். இ. பாலகுரு, மதார்சா, ஏ. சங்கரய்யா, எஸ். அப்பாவு ஆகியவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பதின் நோக்கத்தைப்பற்றி பேசிய பின்னர் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்-எஸ். ஆர். சந்தானம், துணைச் செயலாளர் எஸ். அப்பாவு, ஆர். பெருமாள். நிதி உறுப்பினர்-என். இ. பாலகுரு, விளம்பர உறுப்பினர்கள் எம. ஜககிரியா, இ. கே. கருப்பையா. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்-ஏ. சங்கரய்யா எஸ். எம. சுந்தரம, எஸ். எம். எஸ். இப்ராகிம, பொன்னுராஜ், எம சின்னப்பன், அலாவுதீன், எம நஞ்சப்பன், சி. கணேசன். பின்னர் செயலாளர் நன்றிகூறக் கூட்டம இனிது முடிந்தது எனத் தோழர். எஸ் அப்பாவு எழுதுகிறார்.

* * *

ஆம்பூர் (வ. ஆ)—கிளை

ஆம்பூர், அக. 2—

2—10—49 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு பிராட் பஜார் 57ம் எண் இல்லத்தில், தோழர் சுந்தரராசன் தலைமையில், ஆம்பூர் நகர திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. கூட்டத்திற்கு 40 கழகத்தோழர்கள வந்திருந்தனர். பின்னர் பன்னிரெண்டு உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்-வி. கே. சுந்தரராசன், துணைசெயலாளர்-ஜ. பெ. கோவிந்தன், நிதி உறுப்பினர்-பி. இராமலிங்கம். விளம்பர உறுப்பினர்-ஏ. ஜி. சாமி.

செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் ஜ. பெ. கோவிந்தன் எழுதுகிறார்.

* * *

செல்வபுரம் (கோவை)—கிளை

செல்வபுரம்,(கோவை) செப். 30 —

30—9—49 வெள்ளி மாலை 8மணிக்குக் கழகக் கட்டிடத்தில் திராவிடக் கழக உறுப்பினர்கள் கூட்டம், திரு ஆர். ஆதிசிவம் அவர்கள் தலைமையில, நடைபெற்றது. திராவிடர்கழகம கலைக்கப்பட வேண்டிய அவசியத்தை விளக்கிப் பேசி, தோழர் வை. தர்மலிங்கம ஒரு தீர்மானம கொண்டுவந்தார். அதை ஆதரித்துத் தோழர்கள். ந. சிவப்பிரகாசம், திருமூர்த்தி தோழியர் ஆர். சிரங்கம்மாள் ஆகியோர் பேசியபின்னர் தீர்மானம ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு, திராவிடர்கழகம் கலைக்கப்பட்டது.

பின்னர் தோழர். வை. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் கூடி திராவிட முன்னேற்றக் கழகம அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்-ஆர். ஆதிமூலம். நிதி உறுப்பினர்-மா. அம்மாசை, விளம்பர உறுப்பினர்-ப. கு. திருமூர்த்தி.

ஏனைய செயற் குழுவினர்கள வை. தர்மலிங்கம், க. ஆறுமுகம், நா. ராசு, ந. சிவப்பிரகாசம். நிர்வாகக்குழுவை விரிவு படுத்திக் கொள்ள இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் ப. கு. திருமூர்த்தி எழுதுகிறார்.

* * *

கம்பம்-கிளை

கம்பம், அக. 2—

கம்பம் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 2—10—49ல் தோழர் கே. பி. திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. கழகச் செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ் சுருளியாண்டி, துணைச் செயலாளர்:—கே. பி. திருவேங்கடம் விளம்பர உறுப்பினர்:- எஸ். ஐ. அப்துல்லத்தீப். பொருள் உறுப்பினர்:-கே. பி. போஜன்.

ஏனைய உறுப்பினர்கள்: வி. வண்ணமுத்து. டி. சிவசிதம்பரம், டி. நடராசன், எம. வி. இராசன், நிலத்தரு. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

* * *

வடக்கூர்-கிளை

வடக்கூர் (தூத்துக்குடி), அக். 1—

வடக்கூர் திராவிட வாலிபர் கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் ஷை கழகம 17—9—49ல் சென்னையில் கூடிய மத்திய திராவிட முன்னேற்றக் கழகம தீர்மானித்தபடி "திராவிட முன்னேற்றக் கழகம்' என மாற்றுவதற்காகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கீழ்க்கண்டபடி செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்—ஏ. அய்யாசாமி துணைச்செயலாளர் பி. சண்முகம் பொருள் உறுப்பினர்—எஸ. ஓ வெற்றிவேல். ஏனைய செயற்குழுவினர்கள-எஸ். ஜெகநாதன்,பி.ராமகிருஷ்ணன், ஓய். சந்தானம் ஆர். சுடலைமணி, பி. ஞானமுத்தம சிரோன்மணி, கே. ஐசக் செ. தாவீது, குருஸ்மாணிக்கம், ஏ. ராயப்பன், மாணிக்கம், பி. சித்ரவேல. ஆர். ரத்தினசாமி, பாலராஜ் எஸ். சேசையன்.

1. தொழிலாளர்களுக்காக தனி குழு வொன்று அமைத்து, தொழிற்சங்கங்களுக்கென்று ஏற்ற நல்லத் திட்டங்களை ஏற்படுத்தித் தொழிலாளருக்காக நல்ல முறையில் வேலைகள செய்யும்படி தி. மு. கழகத்தைக் கேட்டுக்கொள்கிறது.

2. தி மு. கழகத்திற்கு என தினசரிப் பத்திரிகை ஒன்று மிகவும் அவசியமாய் தேவைப்படுவதால இப்பொழுது நடைபெற்றுவரும 'மாலைமணி'யையே, தி. மு கழகத தினசரியாக மாற்றும்படி வேண்டிக்கொள்கிறது.

3. திராவிடர் வாலிபர்கழகத்தின் பேரிலுள்ள தளவாடசாமான்களையும, சொத்துக்களையும், இதர கொடுக்கல் வாங்கல்களையும தி. மு. கழகத்துக்கு மாற்றுவது

மேற்கண்ட மூன்று தீர்மானங்களும நிறைவேற்றப்பட்டு கூட்டம இனிது முடிந்தது. எனத் தோழர் ஏ. அய்யாசாமி (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

சீரங்கம் திருவானைக்கா—கிளை

திருவானைக்கா, அக. 2 —

இன்றுகாலை 10 மணிக்குத் தோழர் டி. நடேசன், பி. ஏ. தலைமையில், தோழர் வடிவேல அவர்கள் இல்லத்தில்,சீரங்கம. திருவானைக்கா தி. மு. கழக அமைப்புக் கூட்டம நடைபெற்றது. ஷை அமைப்பைப் பற்றித் தோழர்கள் நடேசன் பி. ஏ; மு. நடராசன். வி. சீனிவாசன், சி. வடிவேல் ஆகியோர் பேசிய பின் ,கீழ்க்கண்டபடி செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—டி. நடேசன், பி. ஏ. துணைச்செயலாளர்:-எஸ். மருதநாயகம், பொருள் உறுப்பினர்:—சி. வடிவேல், விளம்பர உறுப்பினர்:-மா. குருமூர்த்தி.உதவி விளம்பர உறுப்பினர்:—மு. நடராசன ஏனைய செயற்குழுவினர்கள்: டி ஆர். கோபால், பி. கருப்பண்ணன் இரா. கல்யாணசுந்தரம், ஆர். கண்ணையன், ஆர். இராதா. இவர்களோடு மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள இக்குழுவுக்கு உரிமையளிக்கப்பட்டது. பின்பு கழக ஆக்க வேலைக்கென நிதி வசூலிப்பதென முடிவு செய்யப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம முடிந்தது.

* * *

பவானி—கிளை

பவானி, ஆக. 2—

பவானி திராவிட கழகத்தின் செயற்குழு கூட்டம் 2-10-49 ல் கூடி, திராவிடர் கழகத்தைக் கலைத்துவிட்டதாகத் தீர்மானித்தது. பின்பு திராவிட முன்னேற்றக் கழகம அமைக்கப்பட்டு புதிய செயற்குழுவொன்றும ஏற்படுத்தப்பட்டது.

செயலாளர்:— பா. தி. சுவாமிநாதன், துணைச் செயலாளர்:- பி. எஸ். சொக்கலிங்கம். பொருள் உறுப்பினர்:- என். ரங்கசாமி, மற்ற செயற்குழுவினர்:- ஏ. நச்சினார்க்கினியன், பி. ஆர். ஜம்புலிங்கம், வி. திருப்பதிசாமி, எல். எம். நரசிம்மன், ஏ. சுப்பிரமணியம, ஜி. வேணுகோபால், கே. கே. பழனியப்பன். விளம்பரக்குழு:- ஆர். கலியபெருமாள், பி. ஏ. தங்கவேல் ப. ரத்தினம், ஏ. சிவராமன், எஸ. கோவிந்தராஜ். ஷை கழகக் கட்டிடத்தில் திராவிட முன்னேற்ற கழகக் கொடி ஏற்றின பிறகு கூட்டம் முடிந்தது.

* * *

திருவள்ளூர்—கிளை

திருவள்ளூர், அக். 1—

1-10-49 சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு கிராமணியார் சத்திரத்தில், கழகத் தோழர்கள் கூடி திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர் :— ஆர். இரத்தினம துணைச் செயலாளர் :— எம ஏ. அமுது. நிதி உறுப்பினர்கள் :— திருவேங்கடம, கண்ணன், குப்புசாமி. ஏனைய செயற் குழுவினர்கள:—ர. ராசு, நீடின்பன், சனிவாசு, வரதன், எம. சி. தேவராசன். ஆர். பாலசுந்தரம. செயற்குழு உறுப்பினர்களை அதிகரித்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது எனத் தோழர் எம. ஏ அமுது எழுதுகிறார்.

* * *

அரண்மனை சிறுவயல்—கிளை

அரண்மனை சிறுவயல், அக, 3—

3-10-49 மாலை 3-30 மணிக்கு, தோழர் அண. இராமநாதன் அவர்கள் இல்லத்தில் அவர் தம் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக செயற் குழு அமைக்கப்பட்டது. செயலாளர் :—சுப. தியாகராஜன். நிதி உறுப்பினர் :—சுப. ஆறுமுகம விளம்பர உறுப்பினர்: அண இராமநாதன. ஏனைய செயற் குழுவினர்கள:- கரு. மாணிக்கம், கரு. சுப்பிரமணியன, அண. வேலாயுதம சின. சுப்பிரமணியன், கரு. சுந்தரம. நன்றி கூறலுடன் கூட்டம இனிது முடிந்தது. எனத் தோழர் தியாகராஜன் எழுதுகிறார்.

பிறப்பு

ஆம்பூர்; அக. 2—

இவ்வூர் தோழர் டி. எஸ் அப்துல்சலாம் அவர்களுக்கு 2-10 49 ஞாயிறன்று பிறந்த ஆண் குழந்தைக்கு "முகம்மத்தையான்' எனப் பெயர் சூட்டப் பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம. மகிழ்ச்சி!

[ஆ—ர்]

"மாலை மணி"

(திராவிடர் தமிழ் தினசரி)

வருட சந்தா	15—0—0
6 மாத „	7—8—0
3 மாத „	3—12—0

தோழர் சுப்ரமணியம் மறைந்தார்

பொன்னேரி, அக். 4—

நேற்று மாலை 5-மணிக்குக் கழக முக்யஸ்தர் தோழர் ரு. சுப்பிரமணிய (நாடார்) அவர்கள் திடீரென்று, பொன்னேரியில் தமது இல்லத்தில் மாரடைப்பால் இயற்கை எய்தினார். வயது 61.

பொன்னேரியில் வெள்ளம், பஞ்சம் இவைகளினால பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியும், உயர்தர பள்ளியைத் தோற்றுவிக்க நிலமும்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு, உணவு விடுதி ஆகிய இவைகளுக்கு பேருதவி புரிந்தவரும், செங்கல்பட்டு ஜில்லா போர்டு மெம்பராக இருந்தவரும், பஞ்சாயத்து போர்டு தலைவரும், திருவள்ளூர் கழகத்தின் மாஜி தலைவருமாக இருந்து பெரும் பணியாற்றிய தோழர், தமது புதல்வர் பாலகுருசாமி M. B. B. S., புதல்வி, உற்றார் உறவினர்களை துக்கப்பட விட்டுவிட்டு பிரிந்ததைக் குறித்து மிக மிக வருந்துகிறோம். இன்று பொன்னேரி கடைக்காரர்கள் ஹர்த்தால் செய்து அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர் என்று திருவள்ளூர் கழகச் செயலாளர் து. வி. நடராஜன் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

நமது ஆழ்ந்த அனுதாபத்தை நண்பர் பாலகுருசாமிக்கும், மற்றும் அவர் குடும்பத்தினருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

(ஆ-ர்)

வரதராஜப் பெருமானின் மூக்கை அர்ச்சகர் உடைத்தார்

சித்தூர் வரதராஜஸ்வாமி கோயிலில உள்ள மூலவர் விக்கிரகத்தின் மூக்கை, அக்கோயிலில் அர்ச்சகர் வேலை பார்த்து வந்த இராமானுஜ பட்டாச்சாரி என்பவர், தாம்பிர வட்டின் கின்னத்தைக் கொண்டு அடித்து உடைத்துவிட்டார் என்று தெரிகிறது. இவர் அர்ச்சகர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அப்பீல் செய்துகொண்டும் பயனில்லாமல், இந்துமத அறநிலையக் காப்புக் குழுவினரும இவர் நீக்கப்பட்டதே சரி என்று திர்ப்பளித்துவிட்டனர்.

மூக்குடைந்த வரதராஜப் பெருமாள் முறையிட்டுக் கொண்டிருக்க மாட்டார் எனினும், பக்தர்கள கனவில் தம் குறையைச் சொல்லியிருப்பார். ஆனால், அன்றாடம் பெருமாளிடம தொண்டு செய்த அர்ச்சகரும திடீரென்று மூக்கை உடைத்திருக்க மாட்டார். வரதராஜர் அர்ச்சகரிடம ஏதேனும் விஷமம் செய்திருந்து, அல்லது அர்ச்சகரை வஞ்சித்து, மோசடி செய்திருத்தல வேண்டும. ஆத்திரத்தின் மிகுதியால அர்ச்சகர் இவ்வாறு செய்திருத்தல் வேண்டும். தற்காப்பை நாடி அர்ச்சகர் வரதராஜரைத் தாக்கியதிலும் மூக்குடைந்திருக்கலாம். வாதி — பிரதிவாதி இருவரையும் நேரில விசாரித்து, இந்துமத அறநிலையக் காப்புக் குழு தீர்ப்பளித்திருந்தால், மிக மிக நேர்மையாக இருந்திருக்கும.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர் முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G பழனியப்ப முதலியார். மதுரை

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம்

ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

மானேஜர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1